# சாட்சிய வாக்குமூலம்
(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)
முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்
அமர்வு வழக்கு எண்.102/2017

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.10–வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 1,2 எதிரிகள் ஆஜர்.3ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர். ரவிசந்திரன் | மாவட்டம் | : | |
| த/பெ.பெயர் | : | பழனிசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்சமயம் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 18.06.2014 அன்று பணியில் இருந்த போது ஈரோடு வடக்கு காவல் நிலைய ஆய்வாளரிடம் இருந்து 30 வயது மதிக்கதக்க அருண்ராம் என்ற நபருடைய பிரேதத்தை பரிசோதனை செய்ய வேண்டி காவலர் ஆறுமுகம் 2579 என்பவர் மூலமாக வேண்டுகோள் கடிதம் பெற்றேன்.
2. அதன் அடிப்படையில் 18.06.2014 அன்று காலை 8.50 மணி அளவில் பிரேதபரிசோதனை தொடங்கப்பட்டது. அப்போது கைகள் மற்றும் கால்களில் பிணவிரைப்புதன்மை காணப்பட்டது. சுமாரான உடல் கட்டுடன் மல்லாந்த நிலையில் பிரேதமானது வைக்கப்பட்டு இருந்தது. கண்கள் பாதி மூடிய நிலையில் இருந்ததது. மூக்கின் துவாரங்களில் நுரை காணப்பட்டது. வாய் திறந்த நிலையில்இருந்தது. நாக்கு துறுத்தவில்லை. மேல் கழுத்தில் 35செ.மீ. நீளமும் 1 இன்ச் அகலமும் கொண்ட Ligature mark இருந்தது.

3. அந்த Ligature mark ஆனது வலது காதுக்கு கீழ் 6 செ.மீட்டரும், முகவாய்கீழ் மற்றும் வலது காதுக்கு 10 செ.மீட்டர் கீழ் இருந்தது. Ligature mark மற்றும் Hyoid Bone திசு பரிசோதனைக்காக சேகரம் செய்யப்பட்டது. Hyoid Bone மற்றும் Larnyx உடையாமல் இருந்தது. மண்டை ஓடு உடையாமல் இருந்தது. மூளை சாதரணமாக இருந்தது. இதயம், நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் மற்றும் குடல் ரத்தத்செரிவுடன் சாதாரணமாக இருந்தது. வயிறு மற்றும் சீறுநீர் பை காலியாக இருந்தது. மேற்கண்ட பிணஆராய்வு சான்று அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. இறப்பானது பிணஆராய்வுக்கு 6 முதல் 15 நேரம் முன்பாக இறந்திருக்க வாய்ப்பு உள்ளது. பரிசோதனை முடிவுகளில் Hyoid Bone intact மற்றும் இறப்பிற்க்கு முன்பு காயம் இல்லை என்றும் தோலில் உள்ள தோல் ரத்தசெரிவுடன் என்று இருந்தது. இதன் அடிப்படையில் இறப்பு ஆனது தூக்கிட்டதால் ஏற்பட்ட மூச்சுதினறலால் ஏற்பட்டு இருக்கும் என்று இருக்கும் என்னால் மருத்துவ கருத்துரை வழங்கப்பட்டது. பிணஆராய்வு சான்று **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களை அழைத்து அவர்கள் ஆஜர் ஆகவில்லை என்பதால் எனவே குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது.